பொது நிருவாக சுற்றறிக்கை : 03/2022

எனது இலக்கம்: F/FR/03/BRCir.
பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2022.09.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்

**அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பான வழிகாட்டுதல்கள் (அரச கட்டிடங்கள் மற்றும் வீடுகளின் வாடகை - 20.02.01.01)**

மேற்படி தலைப்பில் 2021.10.06 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை 20/2021 தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. பொது நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் உங்கள் சேவை நிலையத்தின் கௌரவ அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பின்வரும் அரசாங்க வீடுகளுக்கு,

| | உத்தியோகபூர்வ இல்லங்களின் வகை | குறியீடு |
|---|---|---|
| (i) | அரச பங்களா இல்லங்கள் | A |
| (ii) | லொரிஸ் இல்லம் | B |
| (iii) | நில பியஸ இல்லம் | C |
| (iv) | மாநாட்டு இல்லங்கள் | D |
| (v) | சமரி இல்லங்கள் | E |
| (vi) | கோதமீ வீதி இல்லங்கள் | F |
| (vii) | ஜயவதனகம இல்லங்கள் | G |

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து மாதாந்தம் அறவிடப்படும் வீட்டு வாடகைப் பணம் அரச கட்டிடம் மற்றும் வீட்டு வாடகை வருமானக் குறியீட்டில் (20.02.01.01) வரவு வைக்கப்பட்டுள்ள போதும், அது தொடர்பான அறிக்கைகள் முறையாக இந்த அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படாததால், நிலுவையில் உள்ள வீட்டு வாடகையாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எனவே, பொது நிருவாக சுற்றறிக்கை 20/2021 இல் குறிப்பிடப்பட்டுள்ள REPO/01 என்ற படிவத்திற்கு மேலதிகமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தையும் (REPO/03) முறையாக பூர்த்தி செய்து, இது வரையில் இந்த அமைச்சுக்கு அனுப்பப்படாதுள்ள விபரங்களை இற்றைப்படுத்தி மாதாந்த அறவீடுகள் பற்றிய தகவலுடன் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

03. இவ்வாறு உங்களினால் எமக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மேற்படி வருமான அறிக்கைகளை ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் "buildingrentpubad@gmail.com" என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மென் பிரதியுடன் இந்த அமைச்சின் "தலைமை நிதி உத்தியோகத்தருக்கு" சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி :- 0112-056580
தொலைநகல் :- 0112- 695723
மின்னஞ்சல் :- fin.report.pubad@gmail.com

REPO 03

*கணக்காளர் தரம் 1 (நிதி அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு)*
*பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள்,*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*
*சுதந்திர சதுக்கம்,*
கொழும்பு 07.
2022.

*மாதாந்த வீட்டு வாடகைப் படிவம்*

*அமைச்சு / திணைக்களத் ……………………………………………………………………………*

| **வீட்டு இலக்கம்** | **குறியீடு (A,B,C,D,E,F,G)** | **வீட்டு உரிமையாளரின் பெயர்** | **மாதம்** | **மாதாந்த சம்பளம் (ரூ.)** | **அறவிடப்பட வேண்டிய மாதாந்த வாடகை (ரூ.)** | **அறவிடப்பட்ட மாதாந்த வாடகை (ரூ.)** | **நிலுவை வாடகை (குறிப்பு 1) (ரூ.)** | **மொத்த வாடகை (ரூ.)** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | |

*குறிப்பு 1*
*நிலுவை வாடகையை மாதாந்தம் வேறு வேறாக குறிப்பிடவும்.*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள வீட்டு வாடகை பற்றிய தகவல்கள் எமது மாதாந்த கணக்கு சுருக்கத்துடன் ஒத்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.*

…………………………………..
*தலைமை கணக்காளர்/ கணக்காளர்*